மாலை முரசு

பக்கங்கள் 18 + 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 15 வெள்ளிக்கிழமை 27.02.2026 | அதிர்வு 212

## இரு இளைஞர்கள் நீரில் மூழ்கிப் பலி!

### காலியில் சோகம்

காலி, பெந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்பரப்பில் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 06

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் மக்கள் திரள்வு

### கையெழுத்துப் போராட்டம் தீவிரம்

(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிராக மக்களின் கருத்துக்களைத் திரட்டி, நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் விழிப்புணர்வு நடவடிக்கை இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகபிரதானநுழைவாயிலுக்கு முன்பாக இன்று வெள்ளிக் கிழமை காலை, பொது அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை இடம் பெற்றது. 07

# மட்டக்களப்பில் யானை அட்டகாசம்! வயோதிபப் பெண் பரிதாப மரணம்!!

### இரு பெண்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(க.சரவணன், வ.சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்திற்குள் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை புகுந்த காட்டு யானை ஒன்று, மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளது.

இந்த யானையின் தாக்குதலில் சிக்கி அதே கிராமத்தைச் சேர்ந்த வயோதிபப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரண்டு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர். 06



# சட்டம் தன் கடமையைச் செய்யும்போது எதிர்க்கட்சியினர் ஏன் அச்சப்படுகின்றனர்?

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன கேள்வி



நாட்டில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் போது ஏற்படும் அச்சத்தையே எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டு வெளிப்படுத்தி வருகின்றனர் என்றும், அவற்றை அரசு ஒருபோதும் பொருட்படுத்தாது என்றும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"எதிர்க்கட்சிகள் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு பேசுபொருள்களை உருவாக்கி, அரசின் மீது வீணான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றன. கடந்த ஆண்டு கொள்கலன்கள் குறித்துப் பேசினார்கள், இப்போது வேறு விடயங்களைக் கையில் எடுக்கின்றார்கள். அவர்களால் முன்வைக்கப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் நாம் நாடாளுமன்றத்தில் தகுந்த பதிலளித்துள்ளோம்.

குறிப்பாக, நிலக்கரி விவகாரத்தில் எவ்வித மோசடியும் இடம்பெறவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளோம். நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அனைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போலன்றி, தற்போது நீதித்துறை சுயாதீனமாக்கப்பட்டுள்ளதால் அரசியல் தலையீடுகள் இன்றி எவரும் சட்டத்தை நாட முடியும்.

சமையல் எரிவாயுப் பிரச்சினை ஏற்பட்ட போது, மிகக் குறுகிய காலத்தில் அதற்குத் தீர்வை வழங்கினோம். அரசின் மீதான மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருவதுடன், ஊழல் மற்றும் மோசடிகள் ஒழிக்கப்பட்டு பொருளாதாரம் சீரான பாதையில் பயணிக்கின்றது. அரசின் இந்த வெற்றிகரமான பயணத்தால் எதிர்க்கட்சிகளின் அரசியலுக்கு இடமில்லாமல் போயுள்ளது. இதன் காரணமாகவே, சட்டம் தன் கடமையைச் செய்யும்போது அவர்கள் அச்சமடைந்து கூச்சலிடுகின்றனர்." – என்றார்.



# டிரக்டரில் ஏற முயன்ற 15 வயது சிறுவன் சக்கரத்தில் சிக்கிப் பரிதாப உயிரிழப்பு!

## குருநாகலில் துயரம்

(க.மகாதேவன்)

குருநாகல், கல்கமுவ பகுதியில் டிரக்டரில் சிக்கி 15 வயதுடைய சிறுவன் ஒருவன் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது, மேற்படி சிறுவன் பயணித்துக்கொண்டிருந்த டிரக்டரின் சாரதி இருக்கைக்கு அருகில் ஏற முயற்சித்துள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாகத் தவறி விழுந்த சிறுவன், டிரக்டரின் சக்கரத்தில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக அவர் மீட்கப்பட்டு கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் மஹநான்னேரிய பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அதிகாலை இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட பாதாள உலகக் குழு தலைவர் 'பொடி லஸ்ஸி'



பாதாள உலகக் குழு உறுப்பினரும் பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரருமான "பொடி லஸ்ஸி" எனப்படும் அருமஹந்தி ஜனித் மதுசங்க டி சில்வா, இன்று அதிகாலை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய இராஜதந்திர மட்டத்திலான பேச்சுகள் மற்றும் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக, இந்தியாவில் அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை நிறைவடைந்ததைத் தொடர்ந்து அவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை 05.55 மணியளவில் மும்பையிலிருந்து வருகை தந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் UL - 142 விமானம் மூலம் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கு விசேட பொலிஸ் குழுவினரால் பொறுப்பேற்கப்பட்ட அவர், பலத்த பாதுகாப்புடன்மேலதிகவிசாரணைகளுக்காக எல்பிட்டிய பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, கொலைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளின் கீழ் இலங்கையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொடி லஸ்ஸி, கடந்த 2024 டிசம்பர் 9 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளிவந்த பின்னர், தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து கடல் வழியாகச் சட்ட விரோதமாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து, போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து வெளியேற முயன்றபோது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மும்பையில் வைத்து இந்தியப் பாதுகாப்புப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் - சைக்கிள் மோதி விபத்து: 80 வயது முதியவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

## நான்கு வயது சிறுமி படுகாயம்

பொலன்னறுவை, சேவாகம பகுதியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில், படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்விபத்தில் நான்கு வயது சிறுமியொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலன்னறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோமாவதிய வீதியின் சேவாகம பகுதியில், நேற்று வியாழக்கிழமை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் பொலன்னறுவை, பளுகஸ்தமன பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 80 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளார்.



விபத்தில் படுகாயமடைந்த முதியவரும் சிறுமியும் உடனடியாகப் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே முதியவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலன்னறுவை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓமந்தையில் 2 பாரவூர்திகள் மோதல்! இருவர் வைத்தியசாலையில் அனுமதி!!

## அதிக பனிமூட்டத்தால் நேர்ந்த கோர விபத்து ஏ-9 வீதி போக்குவரத்து 3 மணிநேரம் பாதிப்பு



(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை பகுதியில் இரண்டு பாரவூர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏ – 9 வீதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்தால் அவ் வீதியூடான போக்குவரத்து சுமார் மூன்று மணிநேரம் தடைப்பட்டதுடன், நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி எரு ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக ஓமந்தைப் பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த பாரவூர்தியைப் பழுதுபார்க்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த வேளையில், அதே திசையில் பின்னால் வந்த மற்றுமொரு பாரவூர்தி அதன் பின்புறத்தில் மோதியதாலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது.

அதிக பனிமூட்டம் காரணமாக வீதி சரியாகத் தென்படாததே விபத்துக்கு முதன்மைக் காரணம் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போதைப்பொருள் வேட்டை: ஒரே நாளில் 725 பேர் கைது!

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 725 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக் காவல் உத்தரவு பெற்ற 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 738 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 3 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து, 713 கிராம் ஹெரோயின், 01 கிலோகிராம் 99 கிராம் ஐஸ், 2 கிலோகிராம் 246 கிராம் கஞ்சா, 56 ஆயிரத்து 27 கஞ்சா செடிகள், 369 கிராம் குஷ்ரக போதைப்பொருள், 62 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 2 ஆயிரத்து 552 போதை மாத்திரைகள், 141 கிராம் 670 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 600 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# அச்சுவேலியில் 9 மாடுகளுடன் கடத்தல்காரர் ஒருவர் சிக்கினார்

## குற்றத் தடுப்புப் பிரிவினர் அதிரடி நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரவாணி பகுதியில், சட்ட விரோதமான முறையில் ஒன்பது மாடுகளைக் கடத்திச் சென்ற ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அப்பகுதியில் நீண்டகாலமாக மாடுகள் திருடப்பட்டு வந்த நிலையில், இன்று சிறிய ரக வாகனம் ஒன்றில் ஒன்பது மாடுகளை ஏற்றிக்கொண்டு கடத்திச் சென்றபோது, காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மீட்கப்பட்ட மாடுகளுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நாளை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மட்டக்களப்பில்...

அதிகாலை வேளையில் வீடுகளில் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் மீதே யானை தாக்கியுள்ளது.

முனைக்காடு, மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த 74 வயதுடைய கதிர்காமத்தம்பி சிவபாக்கியம் என்பவரே இவ் விபத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மேலும், 44 வயதுடைய அருள்சிவம் கோமதி மற்றும் 62 வயதுடைய ஞானசீலன் அருளம்மா ஆகிய இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெருநிலப்பரப்பின் எல்லைக் கிராமங்களில் நீண்டகாலமாக அச்சுறுத்தல் விடுத்து வரும் காட்டு யானைகள், தற்போது மட்டக்களப்பு நகர்புறம் உள்ளிட்ட கரையோரப் பகுதிகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

எனவே, ஒட்டுமொத்த மாவட்டத்தையும் அச்சுறுத்தி வரும் இந்தக் காட்டு யானைகளின் தொல்லைக்கு நிரந்தரத் தீர்வு காண உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.







## இரு இளைஞர்கள்..

நேற்று வியாழக்கிழமை மாலை இந்தச் சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இருவரும் பேருவளை பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 29 வயதுடைய இளைஞர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அனர்த்தம் நேரிட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, 25 வயதுடைய இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மற்றைய இளைஞரான 29 வயதுடைய வரின் சடலத்தைத் தேடும் பணிகள் கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பெந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பயங்கரவாத..**

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும், முன் மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தேவையற்றது என்றும் வலியுறுத்தி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில், பொதுமக்களின் கையெழுத்துக்கள் மற்றும் கருத்துக்கள் திரட்டப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தபால் அட்டைகள் மூலம் தமது எதிர்ப்புக்களையும் கருத்துக்களையும் பதிவு செய்து வழங்கினர்.
































# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாணும் முழமும்....!

'சாண் ஏற முழம் சறுக்குவது' என்பார்கள். அண்மைய டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் விடயத்தில் அரசின் செயற்பாடுகளை நோக்கும் போது அப்படித்தான் தோன்றுகின்றது.

மக்களுக்கான இந்த நிவாரணம் வழங்கும் பணிகளை மிகவும் திறமையாகவும் ஒருங்கிணைந்த ரீதியிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஒருபுறம் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மறுபுறம், களத்தில் பேரிடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள், இன்று வெள்ளிக்கிழமை முதல் தாங்கள் நிவாரணப் பணிகளில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்க முடிவு செய்துள்ளன எனத் தெரிவித்துள்ளன.

அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் 16 ஆவது அமர்வின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே நிவாரணம் வழங்கும் பணிகளைத் துரிதப்படுத்த ஜனாதிபதியின் செயலாளர் உத்தரவு விடுத்தார்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் தனித்தனியாகச் செயல்படாமல், ஒரு கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் விரைவான பலனைப் பெற முடியும் எனச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அதேசமயம் இன்று முதல் நிவாரணப் பணிகளில் இருந்து விலக அரசு அதிகாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அகில இலங்கை பேரிடர் நிவாரண சேவைகள் தொழிற்சங்கம், தொழில்நுட்ப அதிகாரிகள் தொழிற்சங்கம் மற்றும் கிராம அலுவலர்கள் தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பரவலான பேரிடருக்குப் பிறகு 93 நாள்களுக்கும் மேலாக பேரிடர் நிவாரண அலுவலர்களும் கிராம அலுவலர்களும் தொடர்ந்து இரவும் பகலும் பணியாற்றி, அரசாங்கத்திற்கும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் இடையில் முக்கிய ஒருங்கிணைப்பாளர்களாக செயற்பட்டு வருகின்றனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேரிடர் மீட்பு தொடர்பான இழப்பீடு மற்றும் நிவாரணப் பணிகளுக்குத் தேவையான மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீட்டு முன்மொழிகளைத் தயாரிப்பதன் மூலம் தொழில்நுட்ப அதிகாரிகள் கள மட்டத்தில் முக்கியப் பங்காற்றியுள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த முயற்சிகள் இருந்த போதிலும், பேரிடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளைப் பாதிக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் போதுமான கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. இதன் விளைவாக, கூட்டு தொழிற்சங்க நடவடிக்கை தவிர்க்க முடியாதது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினையை எப்படி அரசு கையாளப் போகின்றது?

# சம்மாந்துறை தனியார் கல்வி நிலையங்களில் ஏப்ரல் 1 வரை கற்றல் செயற்பாடுகளுக்குத் தடை!


## தவிசாளர் மாஹிர் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயற்பாடுகளை நான்கு வாரங்களுக்கு நிறுத்துமாறு சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு ஓய்வை வழங்கும் நோக்கில், ஏப்ரல் 01 ஆம் திகதி வரை அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளைத் தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ள வேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச சபை, வலயக் கல்வி அலுவலகம், நம்பிக்கையாளர் சபை, தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகள் இணைந்து எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



இந்த அறிவுறுத்தலை கடைப்பிடிக்கத் தவறும் தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராகப் பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கல்முனை அஷ்ரஃப் வைத்தியசாலையில் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகள்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகள் நேற்று பிரசவமாகியுள்ளனர்.

34 வாரங்கள் பூர்த்தியடையாத நிலையில் இந்த மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்துள்ளன நிகழ்வு பதிவாகியுள்ளது.

சம்மாந்துறை செந்நெல் கிராமத்தைச் சேர்ந்த திருமதி இன்சாத் பானு இந்தக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் எச். எம். றஸீன் முகம்மட் மற்றும் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் பீ. எம். அர்சாத் அகமட் ஆகியோரின் தலைமையிலான மருத்துவக் குழுவினரால் இந்தப் பிரசவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



பிறந்த மூன்று ஆண் குழந்தைகளும் தற்போது மருத்துவ கண்காணிப்பின் கீழ் நலமாக உள்ளனர். தாயாரும் ஆரோக்கியமாக உள்ளார் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குழந்தைகளின் சுகநலத்துக்காக வைத்தியசாலையில் விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது. விசேட துஆப் பிரார்த்தனையை மாளிகைக்காடு பெரிய பள்ளிவாசல் பிரதம இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

இதில் திட்டமிடல் வைத்திய அதிகாரி எம். எம். தாஸிம், தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி கே. எல். எம். றைஸ், வைத்தியர்கள், மேட்ரன், தாதியர்கள், மிட்வைவ்ஸ் மற்றும் சுகாதார சேவை உதவியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் நிறைவில், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் பீ. எம். அர்சாத் அகமட் தலைமையிலான குழுவினர் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தனர்.







# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மலர் வெளியீடும் பரிசில்களும்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாத னைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஞானச்சுடர் மாசி மாத 338 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று இடம்பெற்றது.

வெளியீட்டுரையை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகவரதனும், மதிப் பீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகலிங்கமும் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கல் இடம்பெற்றது.

2025 ஆம் வருட ஞானச்சுடர் மலருக்கான வாசகர்களுக்கான போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்று வெற்றிய டைந்தவர்களுக்கு பரிசில்களும் வழங் கப்பட்டன. அத்துடன் 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன.









# இலங்கைத் திரைத்துறையில் புதிய மைல்கல் ‘அந்தோனி’: மார்ச் 13 இல் உலகளாவிய திரையரங்குகளில் வெளியீடு





இலங்கைத் தமிழ்த் திரைத்துறையை சர்வதேச தரத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு பாரிய முயற்சியாக, முற்றிலும் உள்நாட்டு மற்றும் ஐரோப்பிய, தென்னிந்தியக் கலைஞர்களின் பங்களிப்புடன் உருவாகியுள்ள ‘அந்தோனி’ திரைப்படத்தின் விசேட ஊடக சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் எழில்மிகு கடற்கரைப் பின்னணியில் ஒரு மீனவனின் வாழ்வியலை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இத்திரைப்படம், ஒரு காதல் மற்றும் ‘த்ரில்லர்’ பாணியிலான கதைக் களத்தைக் கொண்டுள்ளது.

தனது மனைவியுடன் அமைதியான வாழ்க்கையைத் தேடும் அந்தோனி என்ற மீனவனின் வாழ்வை, வேறொரு மீனவரால் ஏற்படும் சவால்கள் எவ்விதம் மாற்றியமைக்கிறது என்பதை இப்படம் உணர்வுப்பூர்வமாகச் சித்தரிக்கிறது. ‘ஓசை பிலிம்ஸ்’ தயாரிப்பு நிறுவனத்தின் கலைவளரி சக ரமணதாஸ் சத்தியநாதன் மற்றும் சுகந்தினி ஆகியோரால் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தை சுகிர்தன் கிறிஸ்துராஜா மற்றும் ஜெனோசன் ராஜேஸ்வர் ஆகிய இருவரும் இணைந்து இயக்கியுள்ளனர்.

இப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்திருப்பது இலங்கைத் தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

திரைப்படத்தின் ‘கயல்’ வின்சன்ட் கதாநாயகனாக நடிக்க, டி.ஜே. பானு கதாநாயகியாக நடித்துள்ளார். இவர்களுடன் நிழல்கள் ரவி, அருள்தாஸ், சுதர்சன் ரவீந்திரன் மற்றும் சௌமி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஊடக சந்திப்பில் பேசிய படக்குழுவினர், இலங்கைத் தமிழ் சினிமாவை உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்துடன் வணிக ரீதியாக வெற்றிபெறச் செய்வதே தமது நோக்கம் எனத் தெரிவித்தனர்.

குறிப்பாக மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தின் நிலப்பரப்புகளை மிக அழகாகப் பதிவு செய்துள்ளதாகவும், கடினமான சூழல்களிலும் படப்பிடிப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகவும் இயக்குநர்கள் மற்றும் நடிகர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தமிழ் மொழியில் பிரதானமாக உருவாகியுள்ள ‘அந்தோனி’ திரைப்படம், அதிக எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மலையாளம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியாகவுள்ளது.

இத்திரைப்படம் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி முதல் உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் பிரம்மாண்டமாகத் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கற்பிட்டி ஆனவாசலில்

# 882 கிலோ பீடி இலைகளை கைப்பற்றியது கடற்படை!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை கடற்படை புதன்கிழமை கற்பிட்டியின் ஆனவாசல் மற்றும் முகத்துவாரம் பகுதிகளில் நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கைகளின் போது, சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு, புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 882 கிலோ பீடி இலைகளை மீட்டுள்ளனர். அத்துடன் கெப் ரக வாகனம் ஒன்றையும் கடற் படையினர் மீட்டுள்ளனர்.

கற்பிட்டி ஆனவாசல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையைச் சேர்ந்த இலங்கை கடற்படை கப்பல் விஜய நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, கெப் வாகனத்தில் போக்கு வரத்துக்காக தயார் நிலையில் இருந்த சுமார் 306 கிலோ பீடி இலைகளையும் புதரில் இருந்த சுமார் ஐனூ 576 கிலோ



பீடி இலைகளையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்படை நடவடிக்கைகளின் போது சந்தேக நபர்களால் கைவிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பீடி இலைகள் மற்றும் கெப் வாகனம் என்பக மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் துறை சிறப்புப் பிரிவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

# ஹட்டன் வெக்காளியம்மன் தேர்த் திருவிழா

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் அருள்மிகு ஸ்ரீ வெக் காளியம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வே. விபுலானந்த சர்மா தலைமையில் இடம்பெறவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விக்னேஸ்வரர் வழிபாட்டுடன் கிரி யைகள் ஆரம்பமாகும்.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு விக்னேஸ்வரர் வழிபாட்டுடன் விஷேட யாக பூஜை இடம்பெற்று காலை 9 மணிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத் திலிருந்து தீர்த்தம் எடுத்து வரப்படும். தொடர்ந்து முகூர்த்தக்கால் நடுதல், காப்பு கட்டுதலுடன் கொடியேற்றமும், அபிஷேகமும் நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும். மாலை 4 மணிக்கு திருவிளக்குப் பூஜையும், வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி வலம் வருவார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் புண்ணிய வாஜனம் நடைபெற்று காலை 8 மணிக்கு ஹட்டன் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்திலிருந்து பாற்குட பவனி ஆரம்பமாகும். தொடர்ந்து ஸ்ரீ வெக் காளியம்மனுக்கு 108 அஷ்டோத்திர சங்காபிஷேகம் இடம்பெற்று பகல் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 4 மணிக்கு மாவிளக்குப் பூஜையும் வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி வலம் வருதல் இடம்பெறும்.

திங்கட்கிழமை காலை 6 மணிக்கு விஷேட யாக பூஜையும், வசந்த மண்டப அலங்கார பூஜையும் இடம்பெற்று முற்பகல் 10 மணியளவில் ஸ்ரீ வெக்காளியம்மன் அலங்கரிக்கப்பட்ட தேரில் வீதி உலா வந்து அருள் பாலிப்பார். மாலையில் தேர் ஆலயத்தை வந்தடைந்தவுடன் தீர்த்தோற்சவம், மஞ்சள் நீராட்டு விழா, கொடியிறக்கம், காப்பு அவிழ்த்தலோடு, விஷேட பூசையும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறும்.




# நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையின் குறைபாடுகளை ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி!



**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வைத்தியசாலையிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அந்தவகையில் நெடுங்கேணி வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் நலன்புரிச் சங்கத்தினர், பிரதேச சபை உறுப்பினர்களான இ.கிரிதரன், பொ. தேவராஜா உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

அத்தோடு வைத்தியசாலையில் காணப்படும் மிகவும் முக்கியமான பௌதீகவளக் குறைபாட்டைச் சீர்செய்வது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைத் தம்மிடம் கையளிக்குமாறு வைத்தியரிடம் கேட்டுக்கொண்டார்.

இம்முறை தமக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வைத்தியசாலைக் குறைபாடுகளில் ஒன்றைத் தீர்த்து வைப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால்

# 117 வீடுகளை நிர்மாணிக்க காசோலை வழங்கி வைப்பு!





**(அஷ்ரப் ஏ சமத்)**

"உங்கள் சொந்தமானதொரு இடம் – ஒரு அழகான வாழ்க்கை" எனும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டு உதவித் திட்டத்தின் கீழ், களுத்துறை மாவட்டத்தில் வீடற்ற 117 பயனாளிகளுக்கு முதல் கட்ட காசோலைகள் நேற்று முன்தினம் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் வழங்கப்பட்டன.

இந்த நிதியைக் கொண்டு களுத்துறை மாவட்டத்தில் வீடற்ற 117 குடும்பங்கள் தங்களுக்கெனத் தமது காணியில் வீடொன்றை நிர்மாணித்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் இந்த வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் தற்போதைய அரசு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் களுத்துறை மாவட்ட முகாமையாளர் மற்றும் ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, களுத்துறை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியாராச்சி, சஞ்சீவ ரணசிங்க, நந்தன பத்மகுமார, கே. நிலாந்தி, தனுஷ்க ரங்கநாத், ஒஷானி உமங்க மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.பி.லியனகே மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# புத்தளம் ஆனமடுவயில் பயனாளிகளுக்கு காணி உரிமை பத்திரங்கள் வழங்கல்





(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

தாம் வசிக்கும் காணிகளுக்குப் பல வருடங்களாக சட்டபூர்வமான காணி உரிமை பத்திரம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணி உரிமைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தலைமையில் செவ்வாய்க்கிழமை புத்தளம், ஆனமடுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

ஆனைமடுவ, நவதத்தேகம, கருவலகஸ்வெவ, மகாகும்புக்கடவல மற்றும் வனாத்தவில்லுவ போன்ற பகுதிகளில் வாழும் மக்கள், ஒரு அங்குல நிலத்தையேனும் சட்டபூர்வமாகத் தமதாக்கிக் கொள்ள முடியாமல் நீண்டகாலமாகப் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தனர்.

குறிப்பாக இந்தப்பிரதேசங்களிலேயே பிறந்து, இங்கு வியர்வை சிந்தி உழைக்கும் சாதாரண மக்களுக்கு உரிய காணி உரிமையை வழங்குவது அரசி முதன்மைக் கடமையாகும் என அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன இதன்போது தனதுரையில் வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த வேலைத்திட்டம் அரசியல் கட்சிப் பேதங்களுக்கு அப்பாற்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கடந்த காலங்களில் அரசியல் அல்லது தனிப்பட்ட நெருக்கங்களின் அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்ட போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு அரசியல் பேதமுமின்றி தகுதியின் அடிப்படையில் மாத்திரமே காணிகள் வழங்கப்படுகிறது. இந்தச் செயற்பாட்டின் மூலம் அரசியல் வாதிகளோ அல்லது அதிகாரிகளோ எவ்வித தனிப்பட்ட இலாபத்தையும் எதிர்பார்க்கவில்லை. மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றுவதே இதன் நோக்கம்.

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வளமான நாடு, அழகான வாழ்க்கை கொள்கைப் பிரகடனத்துக்கு இணங்க, மக்களுக்குக் கௌரவமான வாழ்க்கையைப் பெற்றுக கொடுப்பதே அரசின் இலக்காகும். "காணி உரிமையும் தலைக்கொரு கூரையும் இன்றி அழகான வாழ்க்கையை அடைய முடியாது".

வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக கடந்த ஆண்டு முதல் "சொந்தமான ஓரிடம், அழகான வாழ்க்கை " எனும் தேசிய வீடமைப்பு உதவித் திட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது. இந்தக் காணிகளை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய வேண்டாம்.

அவற்றில் குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்வதுடன், காணிகளைப் பயனுள்ள வகையில் பயிரிட்டு அபிவிருத்தி செய்யுங்கள்.

தற்போதைய அரசு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

காணி உரிமைகளை வழங்குவதற்கு மேலதிகமாக, அப்பகுதிகளில் காணப்படும் நீர், மின்சாரம் மற்றும் வீதிப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கும் அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும்.– என்றார்.

இந்த நிகழ்வில் பிரதேச மக்கள் பிரதிநிதிகள், ஆனமடுவ பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற தயிர் சட்டிகள் அழிக்கப்பட்டன!

(பாறுக் ஷிஹான்)

புனித நோன்பு காலங்களில் சம்மாந்துறை பிரதேசத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற தயிர் விற்பனை செய்த வர்த்தகரை எச்சரித்த நீதிவான் சந்தேகத்துக்குரிய 58 தயிர் சட்டிகளையும் உடனடியாக அழிக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் வழிநடத்தலில் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வாராந்த உணவு நிலையைப் பரிசோதனை மேற்கொண்டபோது தயிர் விற்பனை தொடர்பாகக் இரகசியத் தகவல் ஒன்று கிடைத்திருந்தது.


இதற்கமைய செயற்பட்ட பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், குறிப்பிட்ட தயிர் உட்பட அதன் தரம் குறித்து ஆய்வு செய்தனர். சந்தேகத்தின் அடிப்படையில் உடனடியாக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் "பி" அறிக்கையுடன் வழக்கு தாக்கல் செய்தனர்.



இதன்போது தயிரின் நிலையைப் பார்வையிட்ட நீதிமன்ற நீதிவான் சம்பந்தப்பட்ட விற்பனையாளரைக் கடுமையாக எச்சரித்ததுடன் சந்தேகத்துக்குரிய 58 தயிர் சட்டிகளையும் உடனடியாக அழிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கானது மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அத்துடன் இது போன்று விதிமீறல்களில் ஈடுபட்ட 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அத்துடன் பொது மக்களை விழிப்புடன் இருக்குமாறும் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது அதன் தரம் மற்றும் காலாவதித் திகதி குறித்து அவதானமாக இருக்குமாறும் சுகாதார தரப்பினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.



# போதைப் பொருள் வியாபாரி ஒருவர் அம்பாறையில் கைது!

**(பாறுக் ஷிஹான்)**

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மிஹிதுபுர போதைப்பொருள் வியாபாரி பம்போ மீது மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர் குணவர்தனவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி கொழும்பில் இருந்து அம்பாறைக்கு போதைப்பொருள் கொண்டு சென்ற பம்போ என்ற போதைப்பொருள் வியாபாரியை அம்பாறை தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு தோட்டலக பகுதியில் இருந்து ஹெரோயின் ஏற்றிக்கொண்டு தனியார் பஸ்ஸில் அம்பாறைக்கு பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப பட்டுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் பல சந்தர்ப்பங்களில் முயன்ற போதிலும் அவர் பொலிஸாரை ஏமாற்றி இந்தக் கடத்தல் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 2677 மில்லிகிராம் ஹெரோயினை பொலிஸார் மீட்டுள்ளர்.

இந்தச் சந்தேக நபர் அம்பாறை நகரின் மிஹிதுபுர நவகம்புர கல்மடுவ மற்றும் உதயபுர பகுதிகளுக்கு போதைபொருள் விநியோகித்து வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் அறிவுறுத்தலின் பேரில் அம்பாறை பிரிவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரியாராச்சியின் மேற்பார்வையில் அம்பாறை உதவி பொலிஸ் மா அதிபர் சம்பத் விக்ரமரத்ன மற்றும் அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுல் குணவர்தன ஆகியோரின் மேற்பார்வையில் அம்பாறை தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உ.பி.பி.எம்.சாந்த குழுவினரால் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# தி.மு.கவில் இணைந்தார் ஓ.பன்னீர்செல்வம்; முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஐக்கியம்

முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தார் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம். அவருடன் அவரது மகனும், முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத்தும் தி.மு.கவில் இணைந்துள்ளார். அப்போது ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் அண்ணா அறிவாலயம் முன்பு திரண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

தி.மு.கவில் ஓபிஎஸ் இணைந்தபோது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, சேகர்பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.

ஓ.பன்னீர்செல்வம் கடந்து வந்த பாதை:

75 வயதான ஓ.பன்னீர்செல்வம் கடந்த 1973 முதல் அ.தி.மு.கவில் இருந்தவர். முதல்வர், துணை முதல்வர், எதிர்க்கட்சித் துணை தலைவர், அ.திமு..க. இணை ஒருங்கிணைப்பாளர், பொருளாளர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

அ.தி.மு.கவில் வெடித்த 'ஒற்றைத் தலைமை' விவகாரத்தால் அந்தக் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், 'அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு'வைத் தொடங்கி தனி அணியாகச் செயல்பட ஆரம்பித்தார். தனிக் கட்சி தொடங்கினால், 'அ.தி.மு.கவுக்கும் உனக்கும் இனி சம்பந்தமில்லை' என்று சொல்லி ஒரேயடியாய் கதவை இழுத்து மூடிவிடுவார்கள் என்று நினைத்த ஓ.பன்னீர்செல்வம், தனி அணியாகச் செயல்பட்டுக் கொண்டே அ.தி.மு.கவுக்குள் அடைக்கலமாக தூது அனுப்பிக் கொண்டே இருந்தார்.

ஆனால், "எந்த நிபந்தனையும் இன்றி கட்சியில் சேரத் தயாராய் இருக்கிறேன்" என்று அவர் சொன்ன பிறகும் கூட அவரை கட்சியில் சேர்க்க சம்மதிக்கவே இல்லை இ.பி.எஸ். இந்த விஷயத்தில் தனக்கு கைகொடுப்பார்கள் என ஓ.பன்னீர்செல்வம் பெரிதும் நம்பிய பா.ஜ.க. தலைவர்களும் அவரை கைவிட்டுவிட்டதால் என்.டி.ஏ-வில் இருந்து வெளியேறினார்.

இதனிடையே, இனியும் இவரை நம்பிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்ற முடிவுக்கு வந்த அவரது விசுவாசிகளில் சிலர் தி.மு.க. பக்கம் சத்தமில்லாமல் சென்றனர். இன்னும் சிலர் தாய்க் கழகத்திலும் த.வெ.கவிலும் தஞ்சமடைந்தார்கள்.

இதற்கு நடுவே மகன் சகிதம் சென்று முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்தார். அப்போதே சர்ச்சைகள் வெடித்ததால் சிறிது காலம் அமைதிகாத்தவர், அண்மையில் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் இறுதி நாளில் தலைமைச் செயலகத்தில் முதல்வரைச் சந்தித்து பூங்கொத்து கொடுத்ததுடன், "ஐந்து ஆண்டுகளில் தி.மு.க அரசு சிறப்பாகச் செயல்பட்டது; மீண்டும் தி.மு.கவே ஆட்சிக்கு வரும்" எனப் பேட்டியும் கொடுத்திருந்தார்.

# அ.தி.மு.கவுக்கு இனி எதிர்காலம் இல்லை; பழனிசாமியால் இனி வெற்றிபெற முடியாது

"அனைவரையும் அரவணைத்து செல்லும் வகையில் கட்சியையும், ஆட்சியையும் வழி நடத்துகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சர்வாதிகாரமாக நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமியால், எந்த காலத்திலும் இனி வெற்றிபெற முடியாது."

- இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

தி.மு.கவில் இணைந்தபின்னர் ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியில்,

"அண்ணா ஆரம்பித்த தாய்க் கழகமான தி.மு.கவில் மன மகிழ்ச்சியுடன் இணைந்துள்ளேன். அண்ணா, கருணாநிதி காட்டிய வழியில் அனைவரையும் அரவணைத்து செல்லும் வகையில் கட்சியையும், ஆட்சியையும் மு.க.ஸ்டாலின் வழிநடத்தி வருகிறார்.

அரசியலில் சர்வாதிகாரமாக ஆணவப் போக்கோடு நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமி, எந்த காலத்திலும் இனி வெற்றிபெற முடியாது எனும் சூழலை அ.தி.மு.கவுக்கு உருவாக்கியுள்ளார். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் லட்சக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் தி.மு.கவில் இணைந்துள்ளனர்.

ஓர் அரசியல் இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற இலக்கணத்தோடு ஸ்டாலின் கட்சியை வழி நடத்துகிறார். முதல்வர் ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளில் செய்த சாதனைகள் மக்களை முழுமையாகச் சென்றடைந்துள்ளது. அடித்தட்டு, ஏழை எளியவர்கள், பெண்கள் மன



மகிழ்ச்சியோடு இந்த ஆட்சியில் உள்ளனர். அண்ணா, கருணாநிதி எப்படி அனைத்து கட்சிகளையும் தாயுள்ளத்தோடு சட்டப்பேரவையில் அணுகினாரோ, அதே பாணியில் முதல்வர் ஸ்டாலினும் செயல்படுகிறார்.

எடப்பாடி பழனிசாமிக்கு தலைமைப் பண்பு இல்லை. தென்மாவட்டங்களின் எந்தவொரு தலைவரும் வளர்ந்துவிடக் கூடாது என எடப்பாடி பழனிசாமி பழனிசாமி நினைக்கிறார். அவ்வாறு அதிமுகவில் தென் மாவட்டங்களில் வளரும் தலைவர்களை பழனிசாமி அழித்து வருகிறார். பழனிசாமியால் அதிமுக அழிவுப் பாதையில் செல்கிறது.

கடந்த காலங்களில் அ.தி.மு.கவில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்டேன். அனைவரையும் அரவணைக்கும் போக்கு இப்போது அ.தி.மு.கவில் இல்லை. அதனால் எந்த அழுத்தமும் இல்லாமல், சுயமாக முடிவெடுத்து தி.மு.கவில் இணைந்துள்ளேன். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் வாய்ப்புக் கொடுத்தால் போட்டியிடுவேன்.

எனவே, வரும் தேர்தலில் தி.மு.க. மீண்டும் வென்று ஆட்சியமைக்கும். கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, சிறப்பான ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருகிறார். மீண்டும் தி.மு.க. ஆட்சியே தமிழகத்தில் அமையும்.

நான் சரியான முடிவை எடுத்துள்ளேன் என்று அனைவரும் பாராட்டி வருகின்றனர். தி.மு.க. 'தீய சக்தி' என்று நான் ஒருபோதும் சொன்னது கிடையாது. அ.தி.மு.கவுக்கு இனி எதிர்காலமே இல்லை." என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய பிரதமர் மோடிக்கு இஸ்ரேலின் உயரிய விருது

இந்திய பிரதமர் மோடி 2 நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் இஸ்ரேல் சென்றார். முதல் நாளில் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றினார்.

அப்போது இஸ்ரேல் அரசின் உயரிய விருதான 'நெசெட் பதக்கம்' பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது. இஸ்ரேல் அரசுக்கும் யூத மக்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கிய தனி நபர்களுக்கு 'நெசெட் பதக்கம்' வழங்கப்படுகிறது. இதன்படி இஸ்ரேல், இந்தியா இடையிலான உறவை வலுப்படுத்தியதற்காக பிரதமர் மோடிக்கு 'நெசெட்' வழங்கப் பட்டது.

இது குறித்து அவர் சமூக வலை தளத்தில் வெளியிட்ட பதிவில்,

“இந்த மரியாதை தனிநபருக்கு அளிக்கப்படும் மரியாதை கிடையாது. இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான நீடித்த நட்புக்கு அளிக்கப்படும் மரியாதை ஆகும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஈரான் மற்றும் கட்டார் இடையேயான விமான சேவை தற்காலிகமாக நிறுத்தும்

கட்டார் ஏர்வேஸ் நிறுவனம் ஈரானுக்கான தனது சில விமான சேவைகளை தற்காலிகமாக இடை நிறுத்தும் காலத்தை ஜூன் 30 ஆம் திகதி வரை நீட்டிப்பதாக ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புதிய கால அட்டவணையின்படி, மார்ச் 1 முதல் ஜூன் 30 வரை கட்டார் தலைநகருக்கும் தெஹ்ரானுக்கும் இடையே ஒரு நாளைக்கு ஒரு விமானம் மட்டுமே இயக்கப்படும்.

இந்த நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியில் ஈரானுக்கான மற்ற அனைத்து கட்டார் ஏர்வேஸ் விமான சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




# பாகிஸ்தான் - ஆப்கான் எல்லையில் கடும் போர்: பாகிஸ்தான் இராணுவத்தினர் இருவர் உயிரிழப்பு





பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையில் நேற்று வியாழக்கிழமை இரவு முதல் இரு நாட்டுப் படைகளுக்கும் இடையே மூண்டுள்ள கடும் மோதலில், பாகிஸ்தான் தரப்பில் இரண்டு வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, பாகிஸ்தான் எல்லை நிலைகளை இலக்கு வைத்து பெரிய அளவிலான தாக்குதலைத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டமைக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்படுவதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், தமது படைகள் தகுந்த பதிலடி கொடுத்து வருவதாக பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தரார் தெரிவித்துள்ளார்.

இந்த மோதலில் 2 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் 15 இராணுவச் சாவடிகளைக் கைப்பற்றியுள்ளதாக தலிபான் பேச்சாளர் ஜபிஹுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தத் தகவலை பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் முற்றாக மறுத்துள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணமான கைபர் பக்துன்வா பகுதியில் உள்ள பல இடங்கள் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

பதிலடித் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் தரப்பிலும் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.எல்லைப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக டொர்க்கம் எல்லைப் பகுதியில் வசிப்பவர்கள் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்ட தற்காலிக போர்நிறுத்தம் தற்போது முற்றாக முறிந்துள்ளது.

2,500 கிலோமீற்றர் நீளமான எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் இரு நாடுகளுக்கும் இடையே தீவிரவாத முகாம்கள் தொடர்பான விவகாரத்தில் நீண்டகாலமாகப் பதற்றம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 27/02/2026

## சகோதரருக்கு ஆதரவு தெரிவித்தார் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தனது சகோதரர் அலெக்ஸான்ட்ரே ட்ரூடோ இயக்கிய திரைப்படமான 'ஹெயார் ஒப் பியர்' வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு 02




# கனடா பிரதமர் மார்க் கார்னி இன்று இந்தியாவுக்கு விஜயம்

## இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை

கனடா பிரதமர் மார்க் கார்னி 4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று இந்தியா செல்கின்றார். இந்தியா - கனடா இடையே நெருங்கிய நட்புறவு நீடித்து வந்தது.

ஆனால் கனடா முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆட்சிக்காலத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் திகதி கனடாவை சேர்ந்த காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். 02

# கனடாவின் சனத்தொகை வளர்ச்சி நிலைத்த நிலையிலேயே இருக்கும்

கனடாவின் சனத்தொகை வளர்ச்சி இந்த ஆண்டில் நிலைத்த நிலையில் இருக்கும் என நாடாளுமன்ற பாதீட்டு அலுவலகம் மதிப்பீடு செய்துள்ளது.

அண்மைய அரசாங்க குடியேற்ற நிலைத் திட்டத்தின் கீழ், தற்காலிக குடியிருப்பாளர்களுக்கான அனுமதிகளில் செய்யப்பட்ட குறைப்புகள் இதற்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகின்றன.

புதிய குடியேற்ற இலக்குகளின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் மொத்த மக்கள்தொகையின் 7.6 வீதமாக இருந்த தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை 2027ஆம் ஆண்டின் இறுதிக்குள் 5 வீதமாக குறைக்கும் அரசின் இலக்கு 02








# ஒட்டாவாவில் இந்த ஆண்டில் வாகன விபத்துகள் அதிகரிப்பு

ஆண்டின் முதல் ஆறு வாரங்களில் ஒட்டாவா நகரின் வாகன விபத்துகள் அதிகரித்துள்ளன.

ஜனவரி 1 முதல் பெப்ரவரி 14 வரை 3,153 விபத்துகள் பதிவாகியுள்ளன. 2025 இதே காலகட்டத்தில் 2,964 விபத்துகள் மட்டுமே பதிவாகியிருந்தன.

இதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 88 பேர் காயமடைந்தனர். இந்த கால கட்டத்தில் 17 விபத்துகள் பாதசாரிகள் சம்பந்தப்பட்டன.

3153 மொத்த விபத்துகளில் 457 விபத்துகளின் போது வாகன சாரதிகள் சம்பவ இடத்திலிருந்து தப்பி சென்றுள்ளனர்.

2025 ஆம் ஆண்டில், ஒட்டாவாவில் மொத்த 20,650 விபத்துகள் பதிவாகின, இதில் 3,320 விபத்துகளின் போது வாகன சாரதிகள் சம்பவ இடத்திலிருந்து தப்பி சென்றுள்ளனர்.

பாதசாரிகள் சம்பந்தப்பட்ட விபத்துகள் 268, சைக்கிள் சம்பந்தப்பட்ட விபத்துகள் 140 ஆக இருந்தன.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கொலையில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக அப்போதைய கனடா பிரதமர் ஜஸ்டின் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். இதனால் இரு நாடுகளிடையே உறவு சிக்கலானது. இதனிடையே ஆளும் லிபரல் கட்சியில் ஜஸ்டினுக்கு எதிராக பலரும் போர்க்கொடி உயர்த்தியதால் கடந்த 2025 மார்ச் மாதம் அவர் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து லிபரல் கட்சியை சேர்ந்த மூத்த தலைவர் மார்க் கார்னி கனடாவின் புதிய பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். இதன்பிறகு கனடா, இந்தியா இடையிலான நல்லுறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்பு இந்திய வம்சாவளியை சேர்ந்த கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், டில்லியில் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து கனடா பிரதமர் மார்க் கார்னி 4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று இந்தியா செல்கின்றார். மும்பையில் தரையிறங்கும் அவர் இன்றும் நாளையும் பல்வேறு நிறுவனங்களின் சி.இ.ஓக்கள், தொழில்துறை நிபுணர்களை சந்தித்துப் பேசுகிறார்.

இதைத் தொடர்ந்து மார்ச் 1 ஆம் திகதி அவர் டில்லி செல்கிறார். மார்ச் 2 ஆம் திகதி பிரதமர் மோடியை சந்தித்து பேச உள்ளார். அப்போது வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, அரிய வகை கனிமங்கள், விவசாயம், கல்வி, ஆராய்ச்சி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளன என்று என்று எதிர்பார்க்கப்படுகிறது. கசப்புணர்வுகளை மறப்போம் கனடா அரசின் மூத்த அதிகாரி முன்னணி நாளிதழுக்கு அளித்த பேட்டியில்,

“கனடா, இந்தியா இடையிலான பழைய கசப்புணர்வுகளை இப்போது மறந்துவிடலாம்.

இப்போது இரு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். கனடாவில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களில் இந்தியாவுக்கு தொடர்பு இல்லை என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.” என்று கூறியுள்ளனர்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையப்படும் என பாதீட்டு அலுவலக மதிப்பீடு தெரிவிக்கிறது.

எனினும், இது ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதை விட ஒரு ஆண்டுக்கு பின்னர் நிறைவேறும் என கூறப்படுகிறது. மத்திய அரசாங்க குடியேற்ற திட்டத்தின் கீழ், தற்காலிக வேலை மற்றும் மாணவர் வீசாக்களின் எண்ணிக்கை கடுமையாக குறைக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் சுமார் 6.74 லட்சமாக இருந்த அனுமதிகள், இவ்வாண்டில் 3.85 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளன.

மேலும், 2026 முதல் 2028 வரை ஆண்டுதோறும் 3.8 லட்சம் நிரந்தர குடியிருப்பாளர்களை அனுமதிக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 1.48 லட்சம் தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு விரைவான நிரந்தர குடியுரிமை வழங்கும் இரண்டு சிறப்பு திட்டங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த ஒருமுறை திட்டங்கள், கனடாவில் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை மொத்த மக்கள்தொகையின் 5 வீதத்துக்கும் கீழ் குறைப்பதில் முக்கிய பங்காற்றும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சகோதரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

டொராண்டோவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சிறப்பு திரையிடலில் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொண்டமை கவனத்தை ஈர்த்தது.

அலெக்ஸாண்ட்ரே ட்ரூடோ மற்றும் ஜேம்ஸ் மெக்லன் இணைந்து இயக்கிய இந்த திரைப்படம், கனடிய ‘த்ரில்லர்’ வகையைச் சேர்ந்தது. பல ஆண்டுகளாக புவிசார் அரசியல் ஆவணப்படங்களை இயக்கி வந்த அலெக்ஸாண்ட்ரே ட்ரூடோவின் முதல் கற்பனை திரைப்படமாக இது அமைந்துள்ளது.

தாம் மற்றும் ஜஸ்டின் ட்ரூடோ பொதுவாக திரைப்படங்களைப் பற்றி பேசுவதில்லை எனவும் சந்திக்கும் போது விவாதிப்பதை விட நகைச்சுவையாக பேசுவதே அதிகம் என அலெக்ஸாண்ட்ரே தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் இருவரும் இணைந்து திரைப்படத் திட்டங்களில் பணியாற்றும் திட்டம் எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு அரசியலிலிருந்து விலகிய பின்னர், ஜஸ்டின் ட்ரூடோ மிகவும் மகிழ்ச்சியாக அமைதியான வாழ்க்கையை அனுபவித்து வருகிறார் என அலெக்ஸாண்ட்ரே கூறினார்.

அவர் தற்போது பாடகி கேட்டி பெர்ரி உடன் காதல் உறவில் இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஜஸ்டின் ட்ரூடோ தனது படங்களில் நடிப்பார் என எதிர்பார்ப்பதில்லை என்றாலும், எதிர்காலத்தில் ஒரு அனிமேஷன் திரைப்படத்தில் குரல் கொடுக்க வாய்ப்பு இருக்கலாம் என அலெக்ஸாண்ட்ரே நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.



# கனடா- தென் கொரியா இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

கனடாவிற்கும் தென் கொரியாவிற்கும் இடையே புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

பெரும் சக்திகளின் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ள நடுத்தர சக்திகள் ஒன்றிணைய வேண்டும் என கடந்த மாதம் பிரதமர் மார்க் கார்னி வலியுறுத்தியமைக்கு பின்னர், இந்த ஒப்பந்தம் முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை கையெழுத்திடப்பட்ட இந்த உடன்படிக்கை, இரு நாடுகளுக்கிடையே இரகசிய இராணுவ மற்றும் பாதுகாப்பு தகவல்களின் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்ட அடிப்படையை உருவாக்குகிறது.

இரு நாடுகளுக்கும் முக்கியமான முன்னேற்றம் என பாதுகாப்பு அமைச்சர் டேவிட் மெக்யுனிட்டி என தெரிவித்துள்ளார்.

உலகளாவிய பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த், தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் அஹன் கியுபெக் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ச்சோ ஹையுன் ஆகியோர்களுடன் சந்தித்து, தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலையை பிரதிபலிக்கும் வகையில் இருதரப்பு மூலோபாய கூட்டாண்மையை மேம்படுத்த ஒப்புக் கொண்டனர்.

இரு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் சட்ட அமைப்பை உருவாக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளையும் தொடங்க முடிவு செய்யப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதால் இரு நாடுகளும் வர்த்தகம் மற்றும் முதலீட்டிலும் இணைந்து செயல்பட வேண்டும் என தென் கொரியா தெரிவித்துள்ளது.

மேலும், இந்தோ-பசிபிக் மற்றும் ஆர்க்டிக் பகுதிகளில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்த இணைந்து செயல்பட இரு நாடுகளும் உறுதியளித்துள்ளன.





